இணைந்த சேவைச் சுற்றறிக்கை : 02/2026

எனது இலக்கம் : CS/VII/GTS/Promotion
பொது நிருவாக, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2026.04.29

அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள்
பிரதேச செயலாளர்கள் யாவருக்கும்.

**மொழிபெயர்ப்பாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் மொழிபெயர்ப்பாளர் சேவையில் விசேட வகுப்பிற்கு சேவை மூப்பின் அடிப்படையில் தரமுயர்த்துதல்**

1994 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதிய 829/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மொழிபெயர்ப்பாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளின்படியும், இது தொடர்பாக அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் PSC/EST/03-05/02/2018 இலக்க மற்றும் 2026.04.21 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற அரச சேவை ஆணைக்குழுவின் அனுமதியின்படியும், மொழிபெயர்ப்பாளர் சேவையின் விசேட வகுப்பிற்கு தரமுயர்வு பெறுவதற்கு தகைமையுள்ள அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. 2025.03.25 ஆந் திகதிய 10/2025 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் MN 6-2025 (படிநிலை 23) சம்பளத் தொகுதி இப்பதவிக்கு உரியதாவதுடன், அதற்கு ஏற்புடைய மாதச் சம்பள அளவுத்திட்டம் ரூபா 62,230 – 10 x 1190 - 11 x 1360 -15 x 1670 – 114,140 ஆகும். குறிப்பிட்ட சுற்றறிக்கையின்படி, அந்த ஊதிய அளவின் 23வது படிநிலை ரூபா. 90,760 ஆகும்.

03. மதிப்பீட்டு முறை:-

I. அரசு மொழிபெயர்ப்பாளர் சேவையின் விசேட தரத்தில் 2026.03.31 ஆந் திகதியன்று நிலவும் வெற்றிடங்களில் 40% இற்கு இணையான நியமனங்கள் சேவை மூப்பின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். இதற்கென இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் நேர்முகப்பரீட்சை சபையினால் வழங்கப்படும் புள்ளிகளின் வரிசைப்படி முன்னுரிமை தீர்மானிக்கப்படும்.

II. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 01/2019 இலக்கச் சுற்றறிக்கையின்படி சேவைமூப்புக்கான புள்ளிகள் வழங்கப்படுவதுடன், தகுதியைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான குறைந்தபட்ச செயலூக்கமிக்க மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்திற்கு (10 ஆண்டுகள்) மேலதிகமாக, அதிகூடிய மேலதிக செயற்திறன் மிக்க மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்ட உத்தியோகத்தருக்கு சேவைமூப்புக்காக ஒதுக்கப்பட்ட முழுப் புள்ளிகளும் வழங்கப்படும். ஏனைய உத்தியோகத்தர்களுக்கு அந்தப் புள்ளி மட்டத்திற்கு விகிதாசாரமாக, அவர்களின் மேலதிக சேவைக் காலத்திற்காகக் கணக்கிடப்பட்ட புள்ளித் தொகை வழங்கப்படும்.

04. விசேட வகுப்பிற்கு தரமுயர்த்துவதற்கான தகைமைகள்:

I. பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இந்த நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு, மொழிபெயர்ப்பாளர் சேவை அலுவலர் ஒருவர் பொது நிருவாகச் சுற்றறிக்கை 10/2025 இன் MN 6-2025 சம்பளத் தொகுதியின் 22 வது சம்பளப் படிநிலையை எய்தியிருத்தல் வேண்டும்.

III. உரிய காலப்பகுதிக்குள் உரிய வினைத்திறன் காண் தடைப் பரீட்சைகளில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

IV. உரிய காலப்பகுதிக்குள் இரண்டாவது மொழித் தேர்ச்சியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

05. அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் மொழிபெயர்ப்பாளர் சேவையைச் சேர்ந்த விசேட வகுப்பிற்குத் தரம் உயர்வு பெறுவதற்குத் தகைமைபெறும் அனைத்து உத்தியோகத்தர்களும், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமையத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைத் தமது திணைக்களத் தலைவர்களிடம் சமர்ப்பித்தல் வேண்டும். திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை எனச் சான்றுப்படுத்தி, விண்ணப்பதாரியின் பிறப்புச் சான்றிதழ், நியமனக் கடிதம், பதவியில் உறுதிப்படுத்தல் கடிதம், கல்விச் சான்றிதழ்கள் மற்றும் தகைமைகளை உறுதிப்படுத்தும் ஏனைய சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளுடன், தமது அமைச்சின் செயலாளரின் சிபாரிசையும் உள்ளடக்கி இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

06. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி: 2026.05.25 ஆகும்.

07. இத்தரமுயர்விற்கு இணையாக, மொழிபெயர்ப்பாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 10 ஆம் பிரிவின் கீழ் நடாத்தப்படும் போட்டிப் பரீட்சையும் எதிர்வரும் காலத்தில் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒப்பம் ./ என்.யூ. நிஷான் மெண்டிஸ்
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்
பொது நிருவாக, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி: 0112-699966
பெக்ஸ் : 0112-690100
மின்னஞ்சல் : gts.pubad@gmail.com

## மாதிரி விண்ணப்பப் படிவம்

**1994 ஜூலை 26 ஆம் திகதிய 829/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மொழிபெயர்ப்பாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கமைய, அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவையின் விசேட வகுப்புக்கு தரம் உயர்த்துவதற்கான விண்ணப்பப் படிவம்.**

1. சேவை நிலையம்
   I. அமைச்சு : ....................................................................................................................................
   II. திணைக்களம் : ....................................................................................................................................
   III. உப அலுவலகம்: ....................................................................................................................................

2. உத்தியோகத்தரின் முழுப்பெயர் (திரு/திருமதி/செல்வி)::
   ....................................................................................................
   ....................................................................................................................................
3. முதலெழுத்துக்களுடன் பெயர் : ....................................................................................................................

4. பெயர் மாற்றப்பட்டிருப்பின் திருத்தப்பட்ட பெயர்: ....................................................................................

   ....................................................................................................................................
   ..

5. பிறந்த திகதி : .......................... 6. தேசிய அடையாள அட்டை இல : ....................................................

7. நிரந்தர தனிப்பட்ட முகவரி: ....................................................................................................................

....................................................................................................................................

8. தொலைபேசி இலக்கம் ( தனிப்பட்ட ) : ..............................................................
   ( அலுவலக ) : ................................................................
9. மொழிபெயர்ப்பாளர் சேவையில் முதல் நியமனம் பெற்ற திகதி (வகுப்பு I): ...............................................

   I. நியமனக் கடித இலக்கம் : .................................................................

10. நீங்கள் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளீர்களா? : ஆம் / இல்லை

    I. உறுதிப்படுத்தப்பட்ட திகதி : ...................................................................

11. கல்வித்தகைமைகள் :

    i. ....................................................................................................................................
    ....................................................................................................................................

ii. ....................................................................................................................................
.............................................................................................................................................

iii. ....................................................................................................................................
.............................................................................................................................................

iv. ....................................................................................................................................
.............................................................................................................................................

v. ....................................................................................................................................
.............................................................................................................................................

12. மொழிபெயர்ப்பாளர் சேவையின் வகுப்பு I இல் 10 ஆண்டுகள் செயலூக்கம்மிக்க மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த திகதி::................................................

13. உரிய வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்த திகதி :.........................................

14. உரிய மொழித் தேர்ச்சியில் சித்தியடைந்த திகதி :..................................................................................

15. .............................................................................................................................................

அமைச்சு / திணைக்களம் / அலுவலகத்தில் அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவையின் தரம் I இல் உத்தியோகத்தராகப் பணியாற்றும் ....................................................................................... (முழுப் பெயர்) ஆகிய நான், மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் தகவல்களும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் உறுதிப்படுத்துகின்றேன். 1994.07.26 ஆம் திகதிய 829/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மொழிபெயர்ப்பாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் விதிகளுக்கமைய விசேட வகுப்புக்கு தரம் உயர்வு பெறுவதற்கு நான் தகைமை பெற்றுள்ளேன் எனப் பிரகடனம் செய்கின்றேன்.

திகதி: .......................................................  கையொப்பம்: ...............................................................

**<u>திணைக்களத் தலைவரின் சான்றுப்படுத்தல்</u>**

............................................................................................... அமைச்சு / திணைக்களம் / அலுவலகத்தில் தரம் I இல் மொழிபெயர்ப்பாளர் பதவியை வகிக்கும் திரு/திருமதி/செல்வி

.............................................................................................................. அவர்களின் விண்ணப்பத்தில் உள்ள 1 முதல் 14 வரையான தகவல்கள் அவரது தனிப்பட்ட கோப்பின்படி சரியானவை எனச் சான்றளிக்கின்றேன். இவ்வுத்தியோகத்தர் தொடர்பாகப் பின்வரும் தகவல்களைச் சமர்ப்பிக்கின்றேன்.

1. சுற்றறிக்கை இலக்கம் 04 இன் படி தகைமைகளைப் பூர்த்தி செய்த திகதி :

.................................................................................................................................................

2. உத்தியோகத்தர் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்துள்ளாரா?
......................................................

3. உத்தியோகத்தர் முழு சேவைக்காலத்திற்குள் பெற்றுள்ள அரைச் சம்பள / சம்பளமற்ற விடுமுறை விபரங்கள்:

| அரைச் சம்பள / சம்பளமற்ற விடுமுறை பெற்றுள்ள காலகட்டம் | நாட்களின் எண்ணிக்கை | | | காரணம் |
|---|---|---|---|---|
| | வருடம் | மாதம் | நாள் | |
| | | | | |
| | | | | |
| | | | | |

4. தரமுயர்வுக்கு விண்ணப்பிக்கும் திகதி வரை அலுவலர் இணைந்த சேவை மொழிபெயர்ப்பாளராக சேவையாற்றிய முழுச் சேவைக் காலம் :

வருடம்: .............   மாதம்: .............   நாள்: ................

5. அரசு கரும மொழித் தேர்ச்சி பூர்த்தி செய்த திகதி: ...............................

6. உத்தியோகத்தர் அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவையின் வகுப்பு I இல் செயலூக்கமிக்க மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்ததன் மூலம் அனைத்துச் சம்பள ஏற்றங்களையும் ஈட்டியுள்ள விதம் :

*** உத்தியோகத்தர் பூர்த்தி செய்துள்ள காலப்பகுதிக்கு ஏற்ப அட்டவணையைத் தயாரித்து இணைப்பாகச் சமர்ப்பிக்கவும்**

| தொடர் இலக்கம் | சம்பள ஏற்றத் திகதி | பெற்றுக்கொண்ட சம்பளம் | சம்பள ஏற்ற ஆண்டுக்குரிய செயலாற்றுகை அறிக்கையில் மதிப்பீட்டாளரின் பரிந்துரை* | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | மிகநன்று | நன்று | திருப்திகரமானது | திருப்தியில்லை |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

*( *குறித்த கூட்டினுள் √ இடவும். )*

7. இணைந்த சேவையின் அரசாங்க மொழிபெயர்ப்பாளர் ஒருவராக இதுவரை உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா? ......................................

7.1 ஆம் எனில் தகவல்கள் :-

I. குற்றத்தின் தன்மை ( உப அட்டனணை I அல்லது II இன் படி ): ............................................

II. வழங்கப்பட்ட தண்டனை மற்றும் தண்டனையின் தன்மை: ...................................................

.........................................................................................................................................

III. சம்பள ஏற்றங்கள் இடைநிறுத்தப்பட்டிருப்பின் அந்த ஆண்டுகள்: ..........................................

| காலகட்டம் | நாட்களின் எண்ணிக்கை | | | காரணம்<br>வருடம் |
|---|---|---|---|---|
| | வருடம் | மாதம் | திகதி | |
| | | | | |
| | | | | |
| | | | | |

**8. அமைச்சு / திணைக்கள / நிறுவனத் தலைவரின் பரிந்துரை:**

.......................................... ஆம் திகதி முதல் இவ்வுத்தியோகத்தரை விசேட தரத்திற்கு தரம் உயர்த்தப் பரிந்துரைக்கின்றேன் / பரிந்துரைக்கவில்லை.

திகதி : ...................................    திணைக்களத் தலைவரின் கையொப்பம்: ...................................

பெயர் :

பதவி :

பதவி முத்திரை:

**9. அமைச்சின் செயலாளரின் பரிந்துரை:**

திணைக்களத் தலைவரின் மேலுள்ள பரிந்துரையை நானும் பரிந்துரைக்கின்றேன்..

திகதி : ...................................    அமைச்சின் செயலாளரின் கையொப்பம்: ...............................

பெயர் :

பதவி :

பதவி முத்திரை: